பக்கங்கள்: 09 விலை : 20/-

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 01 வியாழக்கிழமை 14.05.2020 கதிர் 58



# அரச பதவிகளில் இராணுவம்: சர்வாதிகாரத்தின் பக்கம் நாடு

## ரணில் கொதிப்பு

கொழும்பு,மே 14

அரச நிறுவனங்களுக்குத் தலைவர்களாக, பணிப்பாளர்களாக இரா ணுவம் மற்றும் படைகளின் உயர் அதிகாரிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமிப்பதன் மூலம் ஜனநாயக செயற்பாடுகள் கேள்விக்குட் படுத்தப்பட்டுள்ளன. சர்வாதிகாரத்தின் பக்கம் நாடு பயணிப்பது வெளிப் படையாகத் தெரிகின்றது. எனவே, ஜனநாயக ரீதியில் நாங்கள் எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

2

## இந்தியத் தூதர் இன்று கடமைகளை ஏற்றார்



கொழும்பு, மே. 14

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தனது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று காலை வீடியோ கொன்பரன்ஸ் மூலம் காண்பித்து தமது கடமைகளை பொறுப்பேற்றார்.

2

## 63 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பினர்

கொழும்பு, மே. 14

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த மேலும் 63 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பினர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் நேற்றுவரை 915 பேர் (ஜனவரியின் இனங்காணப்பட்ட சீனப் பெண் உட்பட) கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 445 பேர் (சீனப் பெண் உட்பட) முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

461 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 108 பேர் பரிசோதனைகளுக்காக கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

## நேற்றைய தொற்றாளர்கள் 26 பேரும் கடற்படையினர்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்ட 26 பேரும் கடற்படையி னர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா தொற்றுக்குள்ளான 915 பேரில் 480 பேர் கடற்படையினராவர்.

## மங்கள சி.ஐ.டியில்!

கொழும்பு, மே. 14

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர இன்று காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையானார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, புத்தளத்தில் உள்ள

2

## மே18 இரவு 7 மணிக்கு வீடுகள் முன்பாக தமிழினப் படுகொலை நினைவேந்தல்!

### யாழ். பல்கலை. மாணவர் ஒன்றியம் அழைப்பு




யாழ்ப்பாணம், மே. 14

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18 அன்று மாலை 7 மணிக்கு எமது வீட்டு முன்றில்களிலும் பொது இடங்களிலும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் அதே நேரம் ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மணியொலி எழுப்பி முள்ளிவாய்க்கால் பேரவலத்தையும் தழினப் படுகொலையையும் நினைவுகூர்வோம் என யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

மாணவர் ஒன்றியத்தினால் அது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நவீன யுகத்தில் நிகழ்ந்த மாபெரும் மனிதப்பேரவலத்தின் உச்சகட்டமான முள்ளிவாய்கால்

2

## நவாலித் தேவாலய முன்றிலில் முள்ளிவாய்க்கால் நினைவு



யாழ்ப்பாணம், மே.14

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாள் நினைவேந்தல் இன்று நவாலி சென். பீற்றர் தேவாலயம் அருகில் இடம்பெற்றது.

2

## நான் எதற்கும் அஞ்சேன்! நீதி கிடைப்பது உறுதி!!

### ராஜித திட்டவட்டம்



கொழும்பு, மே. 14

நான் எக்காரணம் கொண்டும் எதற்கும் அச்சமடையமாட்டேன். அதனால்தான் விசாரணையை எதிர்கொள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகின்றேன். எனினும், எனக்கு நீதி கிடைப்பது உறுதி.

-இவ்வாறுமுன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

2

## நல்லாட்சி மோசடியாளர்கள் சகலரும் விரைவில் சிறைக்கு

### அரசின் பேச்சாளர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு, மே. 14

நல்லாட்சி அரசு என்ற பெயரில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி செய்து நிதியைச் சூறையாடிய அனைத்து முன்னாள் அமைச்சர்களும் விரைவில் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

- இவ்வாறு ராஜபக்ஷ அரசின் பேச்சாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2

## மே18 இரவு 7 மணிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேரழிவின் பதினோராவது ஆண்டு நினைவு நாளை நெருங்கிக்கொண்டு இருக்கின்றோம்.

மே18 என்பது தனியே முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ்ந்த பெருந்துயரின் நினைவு நாள் என்பதற்கும் அப்பால் இலங்கைத் தீவில் சிங்கள, பௌத்த பேரினவாதம் தமிழினம் மீது தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் இனப்படுகொலையின் நினைவு நாளாகவும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஈழத் தமிழினம் தனக்கிழைக்கப்பட்ட அநீதிகளையும் அவற்றின் விளைவான துயர்களையும் நினைவுகொள்வதோடு வீறுகொண்டு போராட திடசங்கற்பம் பூணும் ஒரு நாளாகவும் இந்நாள் வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

நிகழ்த்தப்பட்டு வரும் இனப்படுகொலைக்குச் சிங்கள அரசைப் பொறுப்புக்கூற வைப்பதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான விடிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் களம், புலம், தமிழகம் என சிதறிக்கிடக்கும் தமிழர் சக்தியை ஓரணியில் திரளச் செய்வது அவசியம் ஆகின்றது.

மே 18 இனப்படுகொலை நினைவு நாள் இத்தகைய ஓர் அணிதிரட்டலுக்கான உந்து சக்தியை எமக்கு தர வேண்டும்.

இவ்வாண்டு இந்நினைவு நாள் கோவிட்19என்னும்உலகப்பெருந்தொற்று நோயின் பின்னணியில் வருவதனால் பகிரங்கமாக பெருந்தொகையில் அணிதிரண்டு எமது அபிலாகைளை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலைக் கைதிகளாக நாம் மாற்றப்பட்டுள்ளோம்.

இந்நிலையில்எமதுநினைவுகூரலை, உணர்வெழுச்சியை ஆழமானதாகவும் ஆத்மார்த்தமானதாகவும் அமைத்துக்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளது.

எனவே பின்வரும் விடயங்களை கடைப்பிடிக்க எமது மக்களிடம் அறைகூவல் விடுக்கின்றோம்.

மே 18 அன்று மாலை 7 மணிக்கு எமது வீட்டு முன்றில்களிலும் பொது இடங்களிலும் சுடரேற்றி அஞ்சலிப்போம்.

அதே நேரத்தில் ஆலயங்களிலும் தேவாலயங்களிலும் மணியொலி எழுப்பி முள்ளி வாய்க்கால் பேரவலத்தையும் தழினப்படுகொலையையும் நினைவுகூர்வோம்.

போரின் இறுதி நாள்களில் எமது மக்களின் ஒரே உணவாய் அமைந்த உப்புக்கஞ்சியை எமது இல்லங்களில் ஒரு நேர உணவாக்கி நினைவுகளின் நீட்சிக்கு வழிகோலுவோம்.

அன்றைய நாளில் இந்த முள்ளி வாய்கால் கஞ்சியை பொது இடங்களில் வழங்கி மக்களை நினைவுகூரலுக்கு அழைப்போம்.

எமது எதிர்கால சந்ததிக்குக்எம்மினம் சந்தித்த பேரவலங்களை எடுத்துச் சொல்லி அவர்களையும் இனப்படுகொலையின் சாட்சிகளாக்குவோம்.

இவ்வாண்டு நினைவுகூரல் ஆத்மார்த்தமானதாகவும் ஆழமானதாகவும் உணர்வெழுச்சி மிக்கதாகவும் அமையட்டும் - என குறிப்பிடப்பட்டு உள்ளது.

## மங்கள .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெயர்ந்தவர்களை வாக்களிப்பில் ஈடுபடுத்துவதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸின் மூலம் மன்னாருக்கு அழைத்துச் செல்வதற்கான நிதி வசதிகளை ஏற்படுத்தியமை தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் அங்கு பிரசன்னமானார்.

இந்த விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனிடமும் குற்றப் புலனாய்வு திணைக்களம் முன்னதாக வாக்குமூலம் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நான் எதற்கும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் பிணை இரத்தாகியதையடுத்து முன்னாள் அமைச்சர் ராஜித, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றிரவு சரணடைந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். அதற்கு முன் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

வெள்ளை வான் கடத்தல் சாரதிகள் எனச் சொல்லப்பட்டோரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் நான் கலந்துகொண்டமைக்காக என் மீது வேண்டுமென்றே வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. எனக்கு வழங்கப்பட்டிருந்த நீதிமன்றப் பிணை உத்தரவும் இரத்தாகியுள்ளது. இந்தநிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னைக் கைது செய்வதற்கு முன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகின்றேன்.

என்னைக் கைதுசெய்வார்கள். நீதிமன்றத்தில்ஆஜர்படுத்துவார்கள். விளக்கமறியலில் வைப்பார்கள். இதற்கெல்லாம் நான் பயந்து மறைமுகமாக இருக்கமாட்டேன். எல்லாவற்றையும் சவாலுக்குட்படுத்தியே நான் விசாரணைக்காக முன்னிலையாகின்றேன்.

என்னை விளக்கமறியலில் வைத்தாலும் எனக்கு விரைந்து நீதி கிடைக்கும். இது உறுதி - என்றார்.

## நல்லாட்சி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் கூறுகையில் -

நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நல்லாட்சி அரசின் அமைச்சர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குற்றவாளிகள் அனைவருக்கும் தக்க தண்டனையை நீதித்துறை வழங்கும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட நல்லாட்சி அரசில் இடம்பெற்ற சகல மோசடிகளுடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் சிறைக்குச் செல்வார்கள்.

எக்காரணம் கொண்டும் குற்றவாளிகள் தப்பிப்பிழைக்க மாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நாம் நிறைவேற்றியே தீருவோம். இதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் உறுதியாக இருக்கின்றார்கள் - என்றார்.

## இந்தியத் தூதர் இன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மருந்துப்பொருட்கள் வந்த விமானத்தில் இந்தியாவில் இருந்து வந்த அவர் சுய தனிமைப்படுத்தலில் இருப்பதால் , ஜனாதிபதியிடம் நியமனக் கடிதத்தைக் கையளிக்கும் நிகழ்வு நேரடியாக நடைபெறவில்லை.

கடமைகளைப் பொறுப்பேற்ற இந்தியத் தூதுவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் தொலைபேசியில் உரையாடினார்.

# சட்டவிரோதமாக யாழ்.வந்த ஒன்பது பேரும் வீடுகளுக்கு

யாழ்ப்பாணம், மே. 14

சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்தார்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒன்பது நபர்களும் தனிமைப்படுத்தல் நிறைவடைந்து இன்று வீடுகளுக்கு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பார ஊர்திகளில் கொழும்பில் இருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்தில் உள்ள தமது ஊர்களுக்கு திரும்பியிருந்தனர்.

அவர்களை அடையாளப்படுத்திய பொலிஸாரும் சுகாதார சேவையினரும் இணைந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த நிலையில் கொடிகாமம் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து இன்று அவர்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொடர்பிலான பரிசோதனைகளில் எவருக்கும் தொற்று இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஞாயிறு முழு ஊரடங்கு

இலங்கையில் மே 16 ஆம் திகதி சனிக்கிழமை இரவு முதல் நாடு தழுவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவு 8 மணிக்கு அமுலுக்கு வரும் ஊடரங்குச் சட்டம் திங்கட்கிழமை காலை 5 மணிக்கு தளர்த்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் படிப்படியாக தளர்த்தப்பட்டது. தற்போது கொழும்பு கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் கடந்த 11 ஆம் திகதி தளர்த்தப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் 16ஆம் திகதி இரவு 8 மணிக்கு மீண்டும் நாடு தழுவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவி தெரிவித்துள்ளது.

# தமிழ் மக்கள் தேசிய கூட்டணி கலந்துரையாடல்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான அவசர சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் கூட்டணியின் தலைவர் சீ.வி.விக் னேஸ்வரன் தலைமையில் யாழ்ப் பாணத்தில் உள்ள அவரது இல் லத்தில் இடம்பெற்றது.

சந்திப்பில் ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செய லாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம்,தமிழ்மக்கள்கூட்டணியின்கொள்கை பரப் புச் செயலாளர் க.அருந்தவபா லன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் க.சர்வேஸ்வரன் உள்ளிட்ட வர்கள் கலந்து கொண்டனர்

# 3மாத சம்பளம் அர்ப்பணித்தார் கோட்டாபய

*கொழும்பு, மே 14*

*சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது 3 மாத சம்பளத்தை வழங்கியுள்ளார்.*

*ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி செயலாளர் காரியாலயத்தில் இட்டுகம எனப்படும் சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## அரச பதவிகளில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டியில் தனது இல்லத்தில் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி உயர் மட்டத்தினர் சிலருடனான சந்திப்பின் போது ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த நாள் முதல் படிப்படியாக அரசநிறுவனங்களில் உயர் பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற படை வீரர்களை நியமித்து வருகின்றார். இரு தினங்களுக்கு முன்னர் அமைச்சுக்கள், திணைக்களங்களின் உயர் பதவிகளில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளார். இதில் மூவர் இராணுவ உயர் அதிகார மட்டத்தில் இருந்தவர்கள்.

ஏற்கனவே இரு மாகாண ஆளுநராக இராணுவ உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் மிக முக்கியத்துவம் வாய்ந்த உயர் பதவிகளில் கூட படை உயர் அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி முன்னாள் படை வீரர் என்பதால் அவருக்கு நம்பிக்கைக்குரியவர்களாக படை அதிகாரிகளைத் தோர்ந்தெடுப்பதாக இருக்கலாம். ஆனால், ஜனநாயகநாட்டில்அரசநிறுவனங்களுக்கு நிர்வாகத் திறமை கொண்ட சிவில் சமுக அதிகாரிகளே நியமிக்கப்படவேண்டும். இந்த நிலை தொடர்வதை நியாயமானதாக ஏற்றுக் கொள்ள முடியாது.

அரசியல் கட்சிகள் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் எம்மிடத்தில் முரண்பாடு இருக்க முடியாது.

சர்வாதிகாரத்தின் பக்கம் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனநாயக ரீதியில் நாங்கள் எமது கடுமையான எதிர்ப்பைவெளிப்படுத்தவேண்டும்-என்றார்.

## நவாலித் தேவாலய முன்றிலில் ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
1995 ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி விமானப் படையினரின் விமானக் குண்டு வீச்சில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டதின் நினைவாக நவாலி சென் பீற்றர் தேவாலயத்திற்கு அருகில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இன்றைய நினைவேந்தல் நிகழ்வுகளையும் குழப்பும் வகையில் மானிப்பாய் பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தியமையுடன் நினைவேந்தல் நிகழ்வுக்கு வந்திருந்தவர்களை அப்புறப்படுத்தவும் முனைந்தனர்.

அதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் மற்றும் சட்டத்தரணி ந. காண்டீபன் ஆகியோர் உடன்படாது , நாம் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றியே நிகழ்வை முன்னெடுக்க உள்ளோம் எனக் கூறினர்.

அதனை அடுத்து நிகழ்வுக்கு பொலிஸார் அனுமதித்தனர்.

நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஈகச்சுடரை ஏற்றி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்விடத்தில் சுமார் 50 க்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தனர்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலக்குகளும் வேறு: பாதைகளும் வேறு!

ஈழத் தமிழர்களின் தேசிய வரலாற்றில் இன்று ஒரு முக்கியமான தினம்.

இலங்கை மண்ணில் தமிழர்களுக்கு எதிரான இன வன்முறை தாங்கொணா அளவுக்கு உக்கிரமடைந்த சூழலில், தமிழர் – சிங்களவர் தேசங்களுக்கு இடையில் முரண்பாடு முற்றி, இன இணக்கப்பாடும், சகவாழ்வும் சாத்தியமேயற்றவை என்ற நிலைமை உருவாகி, தமிழர் தேசம் இறுதி முடிவை நோக்கி நகர்ந்த நாள் இது.

ஆம். ‘சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திரமான, இறையாண்மையுடைய, மத சார்பற்ற, சோசலிச தமிழீழ அரசு மீளப்பட்டு, மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.’ – என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானம் 44ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில்தான் – 1976 மே 14 ஆம் திகதியே – நிறைவேற்றப்பட்டது.

அந்த வரலாற்று மைல் கல்லின் ஒரு தினத்தில் நின்று கொண்டு இப்போது பின்புறம் திரும்பிப் பார்க்கின்றோம்.

இந்தத் தினத்தை ஒட்டி மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் ஒரு சிந்தனையைத் தூண்டும் விடயத்தைத் தொட்டுக் காட்டியிருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை 1949இல் தந்தை செல்வா சமஷ்டிக் கொள்கையுடன்தான் ஸ்தாபித்தார். ஆனால் அவர் இறக்கும்போது சமஷ்டி எதிர்பார்ப்புடன் இறக்கவில்லை. *“1977 ஏப்ரல் 26ஆம் திகதி தந்தை செல்வா மரணிக்கும்போதும் – 2009 மே 18ஆம் திகதி தலைவர் பிரபாகரன் மௌனிக்கும்போதும் – இரண்டு தலைவர்களும் தமிழீழக் கனவுடனேயே இருந்தனர் என்பது மறைக்க முடியாத உண்மை.”* – என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் அரியநேந்திரன்.

சவாலுக்கு உட்படுத்த முடியாத உண்மைக் கருத்துகள் இவை.

தமிழர்களின் கடந்த கால அரசியல் சரித்திரத்தில் இணை பேச முடியாத வரலாற்றுத் தலைவர்கள் இருவர். ஒருவர் தந்தை செல்வா. மற்றவர் தலைவர் பிரபாகரன்.

இருவருமே இறுதிவரை ஒற்றைப்பட்ட சிந்தனையிலேயேதான் இருந்தார்கள் என்று அரியநேந்திரன் சுட்டிக்காட்டுவது மறுக்க முடியாதது. வாஸ்தவம்தான்.

இருவரின் இலக்குகளும் ஒன்றாக இருந்தனவாயினும் அதற்காக அவர்கள் வகுத்துக் கொண்ட – வரித்துக் கொண்ட – பாதைகள் வெவ்வேறானவை.

அவரவர் வழியில் அந்தத் தேர்வும் தெரிவும் கனகச்சிதமாகச் சரியானவை.

தந்தையின் பாதையை தலைவர் என்றும் குறை சொன்னார் இல்லை. அது போல காலத்தால் முந்திய தந்தை, பிந்தி இருந்திருந்தால் தம்பியின் பாதையைக் குறை சொல்லியிருக்கமாட்டார் என்பதும் திண்ணம்.

அவரவர் பகவத்கீதையிலே அவரவர் பாணியும் அணுகுமுறையும் தனித்துவமானவையும் தகுதி மிக்கவையுமாகும்.

ஒன்றை ஒன்று குறைசொல்வதோ அல்லது குறை சொல்வதாக நமக்கு நாமே அர்த்தம் சொல்லிக் கொள்வதோ அபத்தமானவை.

அஹிம்சைப் பாதையில் வந்தவர்களாகத் தம்மைக் கூறிக் கொள்பவர்கள் அதன்வழி அர்ப்பணிப்புடன் போராடட்டும். தப்பில்லை. பாராட்டலாம்.

அது போல தலைவன் வழியை வரித்துக் கொண்டவர்கள் மனத் துணிவு இருந்தால் அவ்வழி நிற்கட்டும். அவ்வழியே இயலுமானால் செயற்படட்டும். இயலாவிட்டால் குறைந்தபட்சம் அதை சிலாகித்து அதை நியாயப்படுத்தவதோடு அடங்கலாம். அதை கொச்சைப்படுத்தாமல், விமர்சனம் கூறாமல், தவிர்ப்பதே முறை.

இன்னுமொரு விடயமும் உண்டு. வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத் தினத்திலேயே அது குறித்து உசாவுவதும் கூடப் பொருத்தமானததே.

தந்தை, தலைவர் இருவரினதும் இறுதிக் கனவு தமிழீழத் தாயகம்தான்.

ஆனால் அந்தக் குறிகோளில் நாம் இன்னும் இருக்கின்றோமா என்பது எம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வி.

அதை விட்டு இறங்கி, அதை விடக் கீழான ஓர் இணக்கத்துக்கு அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் தமிழினம் ஆணை கொடுத்துவிட்டது என்பது நம் தலைவர்களின் பகிரங்கக் கருத்து.

இறுதி இலக்கையே இணக்கத்துக்காக விட்டுக் கொடுத்து இறங்கி விட்டோம் என்றால், அதற்கான பாதை யாது என்பதில் மட்டும் விடாப்பிடி விவாதங்களும், விதண்டாவாதங்களும் எதற்காக?

1977இல் நடந்த பொதுத் தேர்தலில் அதற்கு முந்திய வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு – தமிழீழக் கோரிக்கைக்கு – தமிழ் மக்கள் ஏகோபித்து வாக்களித்து ஆணை கொடுத்தார்கள் என்பதும் உண்மைதான்.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. மீண்டும் வரலாறு வட்டமடித்துப் பழைய நிலைக்கு மீண்டு விட்டது. அடுத்தடுத்து வந்த பிந்திய தேர்தல்களில் சமஷ்டித் தீர்வுக்கே தமிழினம் ஆணைகொடுத்திருப்பதாக நம் தலைவர்கள் சொல்லுகின்றார்கள்.

இலக்குகள் மட்டுமல்ல, அவற்றுக்கான பாதைகள் – மார்க்கங்கள் – கூட மாறிமாறிக் கொண்டுதான் இருக்கின்றன.

## தந்தை செல்வநாயகம் இறக்கின்றபோது சமஷ்டிக் கொள்கையுடன் இருக்கவில்லை

### அரியநேத்திரன் நினைவுபடுத்துகின்றார்

*வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றி (2020,மே,14) இன்று 44 ஆண்டுகள். தந்தைசெல்வா இலங்கை தமிழரசு கட்சியை 1949 டிசம்பர்18 இல் சமஷ்டிக்கொள்கையுடன் ஆரம்பித்து அதற்காக பல போராட்டங்களை நடத்தியபோதும் அவர் இறக்கும் போது சமஷ்டிக்கொள்கையுடன் இறக்கவில்லை, தமீழீழ கொள்கையுடனேயே இறந்தார் என தெரிவித் தார் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரிய நேத்திரன்.*



வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றி கடந்த 1976,மே,14 ஆம் நாள். அதன் 44 வயது இன்று ஆகும். அது தொடர்பாக அரியநேத்திரன் மேலும் கூறுகையில் -

இலங்கை தமிழரசுகட்சியை நிறுவிய தந்தை செல்வா அவர்கள் 1949 தொடக்கம் 1976 வரை - அதாவது 27 வருடங்களாக சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை வடக்கு கிழக்குத் தமிழ்பேசும் மக்கள் பெறவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில்தான் பல்வேறு போராட்டங்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்தார்.

இலங்கையை மாறி மாறி ஆட்சிசெய்த ஐக்கிய தேசிய கட்சியும்,ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும், தாம் ஆட்சிசெய்த காலமெல்லாம் தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றிய வரலாற்றை நன்கு உணர்ந்து, தெளிந்த நிலையிலையே இனி சமஷ்டிக்கொள்கை சரிப்பட்டுவராது என்ற நோக்கோடு வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்த வட்டுக்கோட்டை தீர்மானம் தெளிவாக குறிப்பிட்ட விடயம் -

‘இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மைவாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளும் வரை பல

நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆண்டுகொண்டு தனித்துவமாகத் தொடர்ந்திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட தனித்தமிழ் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமை பொருந்திய, சமயச் சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாததாகி உள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது.’

ஆனால் தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் எடுத்த தீர்மானத்திற்கு வடக்கு, கிழக்கு மக்களின ஆணையை 1977 ஜீன் 24 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தல் பார்பதற்கு முன்னமே 1977 ஏப்ரல் 26 இல் தந்தை செல்வா இயற்கை எய்திவிட்டார்.

தந்தைசெல்வா இறக்கும்போது சமஷ்டிக் கனவுடன் இறக்கவில்லை, தமிழீழக்கனவுடனே இறந்தார் என்பதே உண்மை .அதுவே வரலாறு.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை அடைவதற்காகவே ஈழவிடுதலை இயக்கங்கள் சுமார் 36 ஆரம்பிக்கப்பட்டு ஆயதப் போராட்டங்களை மேற்கொண்டன. இருந்தபோதும் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய 35 இயக்கங்களும் செயல் இழந்தன அல்லது இல்லாமல் போயின அல்லது விடுதலைப் புலிகளால் தடைசெய்யப்பட்டன. அதில் ஓரிரு இயக்கங்கள் இலங்கை அரசில் அரசியல் கட்சிகளாக பதிவு செய்யப்பட்டு அரசியல் நீரோட்டத்தில் இணைந்தன. இதுதான் வரலாறு.

எனவே 1977,ஏப்ரல்,26 தந்தை செல்வா மரணிக்கும்போதும், 2009,மே18 தலைவர் பிரபாகரன் மௌனிக்கும் போதும் இரண்டு தலைவர்களும் தமிழீழக் கனவுடனேயே இருந்தனர் என்பது மறைக்கமுடியாத உண்மை.

இந்த இரண்டு தலைவர்களும் எம்மத்தியில் தற்பொது இல்லாமல் இருந்தாலும் தற்போது தமிழ்தேசிய கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயா தலைமையில் இராஜதந்திர அரசியல் செயல்பாடு ஜனநாயக வழிமுறையில் முன்எடுக்கப்படுகிறது.

இந்த ஜனநாயக ரீதியான செயல்பாடுகள் வெற்றிபெறவேண்டுமானால் தமிழ்தேசிய கூட்டமைப்பை தொடர்ந்தும் வடக்குகிழக்கு மக்கள் பலப்படுத்துவது அவர்களின் தாரமீக கடமை. - எனவும் மேலும் கூறினார்.

## கல்வி நிலையை கொரோனா தொற்று தோற்கடிப்பதற்கு இடமளிக்க முடியாது

### சப்ரகமுவ மாகாண ஆளுநர் தெரிவிப்பு

நாட்டில் ஏற்பட்ட இரண்டு கலவரங்களுக்கும் முப்பது வருட யுத்தத்திற்கும் முகம் கொடுத்து முன்னேறிய இலங்கையின் கல்வி நிலையை கொரோனா தோற்கடிக்க இடமளிக்ககூடாது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1971ஆம் ஆண்டு மற்றும் 1988, 1989ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலவரங்களையும், முப்பது வருட யுத்தத்தையும் எதிர்கொண்டு வெற்றிகண்ட இலங்கையின் கல்விநிலையை கொரோனா தொற்று தோற்கடிப்பதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது.

இந்த நிலையில் போசனை குறைந்த மாணவர்களுக்கும் மற்றும் நூற்றுக்கு குறைந்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளை தெரிவு செய்து அவற்றின் மாணவர்களுக்கும் தலா 1000 ரூபா பெறுமதியான போசனை பொருள்கள் இம்மாதம் முதல் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கல்வி பொது தர உயர்தர வகுப்புகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய வகுப்புகளை படிப்படியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விஜய் மல்லையா இந்தியாவுக்கு மீள நாடு கடத்தப்படும் சூழ்நிலை

நாடு கடத்தப்படுவதற்கு எதிராக இங்கிலாந்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய விஜய் மல்லையாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நாடு கடத்தப்படுவதற்கு எதிராக மல்லையா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டது

உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவும் மல்லையாவுக்கு அனுமதி கிடைக்கவில்லை.



விஜய் மல்லையாவால் மேன்முறையீடு செய்ய முடியவில்லை என்றால் 28 நாள்களுக்குள் அவர் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒன்று கூடித் தாயம் விளையாடியதால் ஒரு கிராமத்தில் 12 பேருக்குத் தொற்று




**தேனி மாவட்டம் ஓடைப்பட்டி கிராமத்தில் சம்பவம்**

தேனி,மே14

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தொடர்பில் இருந்தவர் தாயம் விளையாடியதால் மற்றவர்களுக்கும் பரவியது கொரோனா வைரஸ்.

ஒரே கிராமத்தில் 12 பேருக்கு அது உறுதியானது அதிர்ச்சியடைய செய்துள்ளது.

தேனி மாவட்டம் ஓடைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த லொறிச் சாரதி கோயம்பேட்டுக்கு வந்து போயுள்ளார். கோயம்பேடுக்கு யாரெல்லாம் வந்தார்கள் என்பதை கண்டறிந்து சோதனைகள் நடத்தப்பட்டபோது, இவரும் சிக்கினார்.

இதையடுத்து, உடனடியாக சோதனை எடுக்கப்பட்டதில் கொரோனா தொற்று உறுதியானது. இவருக்கு உறுதியாகவும் இவருடன் யாரெல்லாம் தொடர்பில் இருந்தார்கள் என்று அந்த ஆய்வு நடத்தப்பட்டு அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர். 200 பேருக்கு சளி பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இவர்களை சோதித்ததில் 12 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது.


இதில் கவனிக்கவேண்டிய வியம் என்னவென்றால் இவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து தாயம் விளையாடி உள்ளனர். மேலும் கொரோனா பாதித்த லொறிச்சாரதி குடும்பத்தினர், அருகே உள்ள குடும்பத்தினருடன் தாயம் விளையாடினர் எனக் கூறப்படுகிறது. இதுவரை பாதித்த 12 பேர்களில் 5 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிக்கன நடவடிக்கைகளுக்கு இந்திய ஜனாதிபதி உத்தரவு

கொரோனாவால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகளின் பின்னணியில், பல சிக்கன நடவடிக்கைகளை குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் எடுத்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக குடியரசுத் தலைவருக்காக திட்டமிடப்பட்ட 10 கோடி மதிப்பிலான பென்ஸ் ஆடம்பரக் காரை வாங்கும் திட்டம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. அதே போன்று அவர் அளிக்கும் விருந்திலும் சிக்கன நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படும்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் அதிகம் செலவு செய்து மலர் அலங்காரங்களை ஏற்பாடு செய்ய வேண்டாம் என்பதுடன் அங்கு நடக்கும் கட்டுமானப் பணிகளையும் நிறுத்தி வைக்கவும் ராம் நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார்.



இவற்றில் இருந்து மிச்சம் பிடிக்கப்படும் தொகை கொரோனாவால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள ஏழை மக்களுக்கு வழங்கப்படும் என குடியரசுத் தலைவர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சரக்கு வாகனம் – பஸ் மோதி விபத்து 8 புலம்பெயர் தொழிலாளர்கள் பலி!



*54 பேர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் மத்தியபிரதேசம் மாநிலம் குனா என்ற இடத்தில் சரக்கு வாகனம் மீது பஸ் மோதிய விபத்தில், 8 புலம்பெயர் தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.*

*ஊரடங்கு காரணமாக மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் இருந்து சுமார் எழுபதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சரக்கு வாகனம் மூலம் தங்களது சொந்த ஊரான உத்தரபிரதேச மாநிலம் உன்னாவ் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.*

*அப்போது, குனாவில் இருந்து அகமதாபாத் நோக்கி வந்த பஸ் சரக்கு வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், 8 புலம்பெயர் தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.*

*மேலும் 54 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# புதிய இளவரசரின் வருகையினால் லக்சம்பேர்க் அரண்மனை மகிழ்ச்சி

லக்சம்பேர்க் நாட்டின் அரண்மனை புதிய இளவரசர் வருகையால் மகிழ்ச்சியில் திளைத்துள்ளது.

லக்சம்பேர்க் இளவரசர் குயிலாமுக்கு (Guillaume )கடந்த 10 ஆம் திகதி அங்குள்ள மருத்துவமனையில் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை 3கிலோ எடையும் 50சென்டிமீற்றர் உயரமும் உடையதாக இருந்தது என்று அரண்மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும்அந்த குழந்தைக்கு சார்லஸ் என்று பெயரிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று புதிய இளவரசரை கையில் ஏந்திக் கொண்டு மருத்துவமனையில் இருந்து அரச தம்பதியினர் அரண்மனைக்கு திரும்பினர்.



# உணவு உற்பத்தியை அதிகரிக்க அறிவுறுத்தும் வட கொரிய அதிபர்



வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன், நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்க அறிவுறுத்தியமையைத் தொடர்ந்து, நம்போ நகரில் உள்ள விவசாயிகள், இயந்திரங்கள் மூலம் வயல்களில் நாற்று நடும் பணியை தீவிரப் படுத்தியுள்ளனர்.

அவர்களை, வட கொரிய அரசின் கொள்கை பரப்புக் குழுவினர், பாட்டு பாடி உற்சாகமூட்டினர்.

அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டதால், வட கொரியா மீது பல்வேறு நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ள நிலையில், அதிபர் கிம் ஜாங் உன், உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம், தற்சாற்பு பொருளாதாரத்தை அடைய முடியும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரணமாக பேசினால் கூட வைரஸ் பரவும் அபாயம் உண்டு

## ஆய்வில் அதிர்ச்சி தகவல்



சாதாரணமாகப் பேசும்போது வாயில் இருந்து வெளிப்படும் சுவாசத் துளிகளில் இருக்கும் கொரோனா வைரஸ் எட்டு நிமிடங்களுக்கும் அதிகமாக அந்த இடத்தில் உயிருடன் இருக்கும் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாகவே மருத்துவமனைகள், வீடுகள், மாநாட்டு கூடங்கள், சொகுசு கப்பல்கள் மற்றும் காற்று சுழற்சி அதிகம் இல்லாத இடங்களில் குழு குழுவாகத் தொற்று ஏற்படுவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.

பென்சில்வேனியா பல்கலைக்கழகம் நடத்திய இந்த ஆய்வில், ஒரு நிமிடம் சத்தமாக பேசினால் வெளியாகும் சுவாசத் துளிகளில் எட்டு நிமிடம் காற்றில் உலவக்கூடிய 1000 வைரான்கள் அடங்கிய கிருமிகளின் அணுக்கருக்கள் இருக்கின்றன என்பது லேசர் ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# கோமாவில் இருந்து மீண்ட நபருக்கு கொரோனாவால் காத்திருந்த அதிர்ச்சி



கோமாவில் இருந்து எழுந்து நபர், தனது மனைவி கொரோனாவால் மரணடைந்ததை கேட்ட சோகத்தில் தனது உயிரையும் விட்ட நிகழ்வு அமெரிக்காவில் நடந்துள்ளது.

மேரிலாண்ட் மாநிலத்தில் மருத்துவமனை ஒன்றில் பணியாற்றி வந்த 69 வயதான லாரன்ஸ் நோக்ஸ், கொரோனாத் தொற்றால் கடும் மூச்சு திணறலுக்கு உள்ளாகி கோமா நிலைக்கு சென்றார். இதைத் தொடர்ந்து அவரது மனைவி மினெட் நோக்ஸ்க்கும் நோய் தொற்று ஏற்பட்டு கடந்த ஏப்ரல் 7 ஆம் தேதி உயிரிழந்தார்.

அதற்கு அடுத்த 3 நாள்களில் கோமாவில் இருந்து மீண்ட நோக்ஸ், தனது மனைவி உயிரிழந்தமை அறிந்து அதிர்ச்சியடைந்தார். மனைவியை இழந்த சோகத்தில் முறையாக சிகிச்சை எடுத்துக்கொள்ளாத நோக்ஸ், ஏப்ரல் 15 ஆம் திகதி மரணமடைந்தார்.

# கொரோனாவால் உலகப் பொருளாதாரம் 3.2 வீதம் வீழும் என்கிறது ஐ.நா. கணிப்பு

கொரோனா பாதிப்பால் இந்த ஆண்டு உலகப் பொருளாதாரம் 3.2 சதவிகிதம் வீழ்ச்சி அடையும் என ஐ.நா.சபை கணித்துள்ளது.

1930 இல் ஏற்பட்ட உலக பொருளாதார மந்த நிலைக்குப் பிறகு, நாடுகள் சந்திக்கும் மிகப்பெரிய வீழ்ச்சியாக இது இருக்கும் என்பதுடன் சுமார் மூன்றரை கோடி பேர் கொடிய வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் என்றும் ஐ.நா. கூறியுள்ளது. இவர்களில் பெரும்பான்மையினர் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் எனவும் அது தெரிவித்துள்ளது.

கொரோனாவால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சர்வதேச பொருளாதாரம் 8.5 லட்சம் கோடி டொலர் என்ற அளவுக்கு இழப்பை சந்திக்கும் என்றும் இது கடந்த 4 ஆண்டுகளில் பெற்ற அனைத்து வளர்ச்சிக்கும் ஈடானது என்றும் ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

# உலக ரீதியில் கொரோனா பலி மூன்று லட்சத்தை நெருங்கியது..!

உலக அளவில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 43 லட்சத்து 50 ஆயிரத்தை தாண்டியுள்ள நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 லட்சத்தை நெருங்கியுள்ளது.

அமெரிக்காவில் கொரோனா நோய் பாதிப்பு உச்சம் தொட்டு, தொடர்ந்து அதிகரித்தபடியே உள்ளது. அங்கு கொரோனா பாதிப்பு 14 லட்சத்தையும், பலி எண்ணிக்கை 83 ஆயிரத்தையும் கடந்துள்ளது. ஸ்பெயினில் 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருக்கின்றமையுடன், 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்யாவில் பாதிப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 40 ஆயிரத்தை தாண்டியுள்ள நிலையில், பலி எண்ணிக்கை 2 ஆயிரத்து 200ஐ கடந்துள்ளது.

பிரிட்டன், இத்தாலியில் பாதிப்பு எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் அதிகமாக உள்ளதோடு, பலி எண்ணிக்கை 30 ஆயிரத்துக்கும் கூடுதலாகப் பதிவாகியுள்ளது.

# கொரோனா வைரஸ் முற்றிலும் அழியாமலும் கூடப் போகலாம்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் முற்றிலும் அழியாமலும் போகலாம் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

எய்ட்ஸைத் தோற்றுவிக்கும் எச்.ஐ.வி.போல் குறிப்பிட்ட காலத்தில் தோன்றும் 'எண்டமிக்' வகை வைரஸாக் அது மாறிவிடும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒருவேளை கொரோனா வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டறியப்பட்டாலும், வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கும், போதுமான அளவில் உற்பத்தி செய்து அவற்றை உலகளவில் விநியோகிப்பதற்கும் மிகப்பெரும் முயற்சி தேவைப்படும் என உலக சுகாதார அமைப்பின் அவசரகால திட்ட நிர்வாக இயக்குநர் மைக் ரயான் தெரிவித்துள்ளார்.

அம்மை, எச்.ஐ.வி. போன்றவற்றுக்குத் தடுப்பு மருந்துகள் கண்டறியப்பட்டுள்ள போதிலும், அவை முற்றிலுமாக நீங்கிவிடவில்லைச் என்பதை சுட்டிக்காட்டியுள்ள ரயான், ஆனால் அவற்றை கட்டுப்படுத்தும் வழி நம்மிடம் உள்ளது என்றும், அதே போல் கொரோனாவின் வீரியத்தை கட்டுப்படுத்தும் வழியை கண்டறிவது மிக அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.



# வவுனியா முகாமிலிருந்து மேலும் 111 பேர் விடுவிப்பு







வவுனியா, மே. 14

வவுனியா பெரியகட்டு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து இன்று 111 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கடற்படையினரின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அழைத்து வரப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனோ தொற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து வவுனியா பெரியகட்டில் உள்ள முகாமில் கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்களென 111 பேர் பஸ்களின் மூலம் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து 111 பேரும் இன்றைய தினம் தமது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-

தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 078 284 5000

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)

தொடர்புகளுக்கு: 076 100 5277

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 307 8799

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 411 4422

# ராஜபக்ஷிக்களின் விஷமத்தனமான ஆயுதமே இனவாதம்

## அநுரகுமார திஸாநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 14

**நாட்டு மக்களுக்கு நல்லவர்கள் போல் பாசாங்கு காட்டிக்கொண்டு மறுபுறத்தில் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக தமிழ் - முஸ்லிம் - சிங்கள விரோத இனவாதத்தைக் கிளறிவிடுவது ராஜபக்ஷ கூட்டணியின் விஷமத்தனமான ஆயுதமாக உள்ளது.**

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளினால் வெற்றிவாகை சூடி – மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியில் மீண்டும் அமர்ந்துகொள்வதே ராஜபக்ஷ கூட்டணியினரின் இலக்காகும். இதற்காகவே அவர்கள் நாடெங்கிலும் இனவாதச் செயற்பாடுகளை மறைமுகமாக அரங்கேற்றி வருகின்றனர். அதில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் முதலிடத்தில் இருக்கின்றன.

கொரோனா வைரஸ் பேரிடரையும் தமது இனவாதச் செயற்பாடுகளுக்கு ராஜபக்ஷ அரசு பயன்படுத்திக்கொள்கின்றது. மனிதாபிமானமற்ற முறையில் எதேச்சதிகாரத்துடன் இந்த அரசு செயற்படுகின்றது.



ராஜபக்ஷக்களின் இந்த இனவாதச் செயற்பாடுகளுக்கும், எதேச்சதிகார ஆட்சிக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் பதிலளிக்க வேண்டும் – என்றார்.

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கவை என்கிறார் சஜித் பிரேமதாஸா



எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகப் பரவலாக அரங்கேற்றப்படுகின்ற இனவாதச் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கவை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எமது சமூகத்தில் தொடக்க நிலையிலுள்ள இனவாதமானது எமது தாய் நாட்டின் மக்களுக்கு மத்தியில் இன, மத, சமூகப் பிரிவினைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இது எமது தேசிய நலனுக்கு எதிரானதும், அதற்கு குந்தகம் விளைவிப்பதும் ஆகும். மனிதத் தன்மைக்கும், உயர் மனித விழுமியங்களுக்கும் கூட இது எதிரானது.

எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராக பரவலாக அரங்கேற்றப்படுகின்ற இனவாதச் செயற்பாடுகள் அருவருக்கத்தக்கவை; நம் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டியவை.

இத்தகைய வெறுக்கத்தக்க செயற்பாடுகள் கௌதம புத்தரின் உன்னத போதனைகளுக்கும் முரணானவை ஆகும்.

ஆசிர்வதிக்கப்பட்ட அந்தப் போதனைகளுக்கு தவறான அர்த்தம் கற்பிப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் அவற்றுக்கு எதிரான குற்றமாகவும் தேசத்துரோகமாகவுமே அமையும் – என தெரிவித்துள்ளார்.

# இன ஒற்றுமையுடன் வாழ்வோம் பிரதமர் மஹிந்த வேண்டுகோள்!



கொழும்பு, மே.14

இனவாதங்களைத் தூண்டும் வகையில் எவரும் செயற்படக்கூடாது. இன ஒற்றுமையுடன் அனைவரும் வாழ ஓரணியில் திரள வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இனவாதத்தை வளர்த்து விட்டு, அதில் குளிர்காய எவரும் முற்படக்கூடாது எனவும்,நாட்டில் அரங்கேற்றப்பட்டுவரும் இனவாதச் செயற்பாடுகளுக்கும் அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மூவின மக்களும் இன, மத, மொழி வேறுபாடின்றி ஒற்றுமையுடன் வாழ்வதே அரசின் விருப்பம் எனவும், இனவாதத்தைத் தூண்டி அதிகாரத்தைத் தக்க வைப்பது அரசின் நோக்கமல்ல எனவும், உண்மையான இனவாதிகளை மக்கள் முன்னிலையில் நிறுத்தி அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதே அரசின் குறிக்கோள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கரைச்சிப் பிரதேச சபை வாசலில் மரக்கறிகளைக் கொட்டி எதிர்ப்பு





கிளிநொச்சி, மே. 14

வர்த்தகச் செயற்பாட்டுக்குக் கரைச்சிப் பிரதேச சபை இடையூறாக உள்ளதெனத் தெரிவித்து, பிரதேச சபை வாயிலில் வர்த்தகர் ஒருவர் மரக்கறிகளைக் கொட்டிய சம்பவம் இன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி சேவைச் சந்தையில் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் வர்த்தகர் ஒருவர், தமது வர்த்தக நடவடிக்கைக்கு இடையூறாக கரைச்சிப் பிரதேச சபை உள்ளதெனத் தெரிவித்தும், பிரதேச சபையின் செயற்பாட்டால் மரக்கறிகள் பழுதடைந்து தேங்கியதாகத் தெரிவித்தும் இன்று மரக்கறிகளை பிரதேச சபை பிரதான வாயிலில் கொட்டினார்.

இன்று காலை 9 மணியளவில் கரைச்சி பிரதேச சபையின் பிரதான வாயிலில் அந்த வர்த்தகரினால் மரக்கறிகள் கொட்டப்பட்டன.

இது தொடர்பில் வர்த்தகர் கூறுகையில் –

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக எமது வர்த்தகச் செயற்பாடுகள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நாடு வழமைக்கு திரும்பி வரும் நிலை யில் வர்த்தகச் செயற்பாடுகளும் வழமைக்கு திரும்பி வருகின்றன. நிரந்தரக் கட்டடத்தின் ஒரு பகுதியில் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்துள்ள நிலையில் ஒரு தொகுதியினர் தற்காலிகக் கொட்டகையிலேயே வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர். வர்த்தச் செயற்பாடுகளுக்காக அனுமதிக்கப்பட்ட பகுதியில் பூட்டப்பட்டிருந்த வர்த்தக நிலைய உரிமையாளருடன் பேசி வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த நிலையில், கரைச்சி பிரதேச சபையினரால் அது தடுக்கப்பட்டது. மழை, வெயில் காரணமாக அந்தத் தற்காலிக இடத்தில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது உள்ளது.

இந்த நிலையிலேயே அங்கு இன்று(நேற்று) காலை வர்த்தக நடவடிக்கைக்காகச் சென்றேன். கரைச்சி பிரதேச சபையினால் வர்த்தக நிலைய உரிமையாளர் அச்சுறுத்தப்பட்டுள்ளார். கரைச்சி பிரதேச சபையின் அடாவடி நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். மிக மோசமாக அவர்கள் நடந்து கொள்கின்றனர் – என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனிடம் வினவிய போது –

கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப் பகுதியில் சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமைவாக நெரிசலை குறைப்பதற்கான நடவடிக்கைகளைக் கரைச்சி பிரதேச சபை முன்னெடுத்திருந்தது. அந்த வகையில் நெருக்கமான பகுதி வரிசைகள் இரண்டைச் சீட்டு முறை மூலம் வழங்குவதற்கு வர்த்தகர் சங்கம் நடவடிக்கை எடுத்தது. இந்த வர்த்தகரின் கடை வரிசை தவிர்ந்த மற்றைய வரிசைக்கு சீட்டு கிடைத்தமையால் அவர்கள் நிரந்தர கட்டடத்தில் வர்த்தகச் செயற்பாடுகளைக் கடந்த திங்களன்று ஆரம்பித்தனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை மற்றைய வரிசையிலும் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதுவரை அவர்கள் வழமை போன்று தற்காலிக இடத்திலேயே வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும். இக்கட்டான காலப்பகுதியில் வர்த்தகர்கள் பிரதேச சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்திருந்தனர்.

ஏனையபிதேச சபைகள் சந்தைகளை பொது வெளிகளிலும், விளையாட்டு மைதானங்களிலும் முன்னெடுத்தன. ஆனால் கரைச்சி பிரதேச சபையின் சந்தை அந்த வளாகத்திலேயே முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் ஏனைய வர்த்தகர்கள் அமைதியாக இருக்க இந்த வர்த்தகர் மாத்திரம் இவ்வாறு செயற்பட்டார் – என்றார்.







*சென் ஜோசப் மக்கள் பேரவையினரால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மந்துவில், மல்லிகைத்தீவு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் கொரோனா வைரஸ் பரவலால் தொழில்களை இழந்து தவிக்கும் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.*

## கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பிரவேசிப்பதற்கு புதிய நெடுஞ்சாலை

கொழும்பு, மே. 14

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குப் பிரவேசிப்பதற்கான புதிய நெடுஞ்சாலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை 9 மணியளவில் இந்த நெடுஞ்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி மற்றும் சிவில் விமானப்போக்குவரத்துஅமைச்சின் மேலதிக செயலாளர் சுனில் குணவர்தன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கடந்தமூன்றுமாதங்களுக்கு முன்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டவர்கள் நெடுஞ்சாலை அமைக்கப்பட வேண்டிதன் அவசியம் தொடர்பில் ஆலோசனை வழங்கியதாகவும் அதன் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

## மார்ச், ஏப்ரல் மின்சார பட்டியலை தனியாக வழங்குவதற்கு உத்தரவு

கொழும்பு, மே. 14

பாவனையாளர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாத மின்சார பட்டியல்களை தனித்தனி பட்டியல்களாக வழற்குமாறு, மின்சாரசபை அதிகாரிகளிற்கு அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மஹிந்த அமரவீரா இதனைத் திறந்தார்.

அத்துடன், பாவனையாளர்களுக்குக் கட்டணத்தைச் செலுத்த ஒரு மாதம் அவகாசம் வழங்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir
பனையோலை விசிறி
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி
நாளைய (15.05.2020) தலைப்பு
பனையோலை விசிறி

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிங்கள செவ்வி தொடர்பில் சுமந்திரன் வழங்கும் விளக்கம்

அண்மைக்காலமாக தமிழர்களின் அரசியலில் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் விடயம் சுமந்திரன் சிங்களத்தில் வழங்கிய செவ்வி. அது தொடர்பில் காணொலி ஒன்றின் மூலம் விளக்கமளித்திருக்கின்றார் சுமந்திரன். அதன் விவரம் இங்கு பிரசுரமாகின்றது.

**தமிழ் மக்களுக்கு வணக்கம்!**

நான் இந்தக் காணொலியில் விசேடமாக தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியை கூற விரும்புகிறேன். ஏனென்றால் கடந்த சில நாள்களுக்கு முன் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு, நான் கொடுத்த செவ்வி ஒன்றை தமிழ்ப்படுத்தியதாக சில மொழிபெயர்ப்புகளைச் செய்து அதனூடாக சர்ச்சை ஒன்று பெரிதாக கிளப்பப்பட்டிருக்கிறது. சில நாள்கள் நான் இது குறித்து எதுவும் சொல்லாமல், கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லிக்கொண்டு இருந்திருக்கிறேன்.

இந்த செவ்வி, சிங்கள மொழியில் எடுக்கப்பட்ட போது, அந்தச் செவ்வியை சரியான வழியிலே, மொழி புரிந்தவர்கள் பார்க்கிறபோது, அது எதற்காக எடுக்கப்பட்டிருக்கிறது என்பது புரியும். குற்றச்சாட்டுகளோடு 'நீங்களெல்லாம் செய்வது நாட்டைப் பிரிப்பதற்காக, நாட்டிற்கு எதிரான துரோகத்தைதான் செய்கிறீர்கள்; விடுதலைப் புலிகள் நாட்டைப் பிரிப்பதற்கு செய்த சதியை நீங்கள் தொடர்ந்து வித்தியாசமாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்' என்ற குற்றச்சாட்டை எங்கள் மீது சுமத்தி அதை சிங்கள மக்கள் மத்தியில் சேர்ப்பது தான் அதனுடைய நோக்கம் என்பது அதைப் பார்க்கிற எவருக்குமே புரியும்.

அப்படியானவர்களோடு ஏன் இவர் பேசுகிறார்? பேசாமல் தவிர்த்திருக்கலாம் என்று சொல்லுகிற பலர் என்னோடு பேசி இருக்கிறார்கள். அப்படியானவர்களோடு நாங்கள் பேச வேண்டும். நாங்கள் தமிழ் மக்கள் சார்பில் பேச்சு வார்த்தையிலே ஈடுபடுகிறோம் என்று சொல்லுகிற பொழுது, கூடுதலாக அப்படியானவர்களோடுதான் நாங்கள் பேசுகிறோம். இது சில வேளைகளிலே பெரும்பாலான எங்களுடைய மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். நாங்கள் மேசையில் அமர்ந்து பேசுவது எங்களைப்போல சிந்திக்கிறவர்களோடு மட்டும் அல்ல – அதுவும் மிகவும் குறைவான எண்ணிக்கையானவர் கள். அதிகமானவர்கள் 85 அல்லது 90 வீதத்தினர் 'சமஷ்டி என்றால் பிரிவினை' என்று நினைக்கிறவர்கள். அதைத்தான் அந்த ஊடகவியலாளரும் சொன்னார். அதேபோல பல பல சிந்தனைகள் அவர்களிடத்தில் ஊறிப் போயிருக்கின்றன். அவர்களோடு பேசுகிற போது, அதை மனதில் இருத்தி நாங்கள் பேச வேண்டும்.

எது எப்படியாக இருந்தாலும் இந்த ஊடக செவ்வியிலே நான் சொன்னதாக 'கப்பிட்டல் டிவி' என்கின்ற, இன்றைய ஆட்சியாளர்களுடைய ஓர் ஊடகம், செய்தி ஒன்றை வெளியிட்டது. அதிலே ஒரு சில பதில்களை தனியே வெட்டி எடுத்து, தாங்கள் அதற்கு கொடுக்கிற தமிழ் மொழிபெயர்ப்பை கொடுத்து, அவர்கள் அதை வெளியிட்ட உடனேயே, எங்களது தரப்பிலே இருந்து பலர் அதை குறித்து பேசத் தொடங்கி விட்டார்கள். முழுமையான செவ்வியை பார்க்காமலும், முழுமையான செவ்வியிலே சிங்கள மொழியிலே என்ன சொல்லப்பட்டது என்பதை தெரிந்து கொள்ளாமலும் அறிக்கை விட்டவர்கள் தான் கூடுதலானவர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஊடக செவ்வியை தமிழ் மொழியில் மொழி பெயர்த்து, இரண்டு பத்திரிகைகள் நேற்று முன்தினம் முழுமையாக வெளியிட்டு இருக்கின்றன. ஆனால், அதிலே கூட தவறுகள் இருக்கின்றது.

இந்த சர்ச்சைக்குரிய வியத்தை நாங்கள் எடுத்து பார்ப்போமாக இருந்தால், அதிலேயே அவர்கள் என்னிடத்திலே ஒரு குற்றச்சாட்டாக கேட்கிற கேள்வி, 'தமிழீழ விடுதலைப் புலிகளுடைய அரசியல் இலக்கு அல்லது அரசியல் நடவடிக்கை, ஆயுத நடவடிக்கைகளோடு உங்களுக்கு உடன்பாடு உண்டா ?' என்பது தான்.

'நடவடிக்கைகள்' என்ற சொல் தான் பாவிக்கப்பட்டிருக்கின்றது. 'வியாபாரய' என்று சொன்னால் நடவடிக்கைகள். நேற்றைய தினம் நான் தேர்தல் ஆணையகத்தில் இருந்து தேர்தலை பற்றி பேசிக்கொண்டிருந்த பொழுது பலதடவைகளிலே இந்த 'வியாபாரய' என்று சொல் என்னுடைய காதுகளில் விழுந்தது. 'மத்திவரண வியாபாரய' என்று சொல்லுகிறார்கள். அப்படி என்றால் தேர்தல் நடவடிக்கைகள். இப்படியான சூழலில் நடக்க முடியுமா ? – அதுதான் கேள்வி. அது போராட்டம் அல்ல. 'வியாபாரய' என்பது போராட்டம் அல்ல. 'தேர்தல் போராட்டம்' என்று ஒருவரும் சொல்லப்போவதில்லை.

போராட்டம் என்பதற்கு 'அறகள' அல்லது 'சட்டன' என்ற சிங்கள சொற்கள் உண்டு. 'வியாபாரய' என்று சொன்னால் 'நடவடிக்கைகள்', 'செயற்பாடுகள்'. ஆகவே, குற்றச்சாட்டாக என்னிடத்திலே கேட்கப்பட்ட கேள்வி – ஒரே வசனத்திலே மூச்சுவிடாமல் அவர் கேட்ட கேள்வி அதுதான். 'தமிழீழ விடுதலைப் புலிகளின்...



அரசியல் செயற்பாடுகள், ஆயுத செயற்பாடுகளோடு உங்களுக்கு உடன்பாடு இருக்கிறதா?' நான் 'இல்லை!' என்று பதில் சொல்லியிருக்கிறேன். பிறகு அதற்கான காரணத்தையும் சொல்லியிருக்கிறேன். 'எப்பொழுதுமே நான் வன்முறையையோ ஆயுதத்தையோ நான் ஏற்றுக்கொள்ளவில்லை, 'நம்பவில்லை' என்று சொல்லி இருக்கிறேன்.

எனக்கு ஆயுதத்திலேயோ, வன்முறையிலேயோ நம்பிக்கை கிடையாது. அதிலே எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. அதிலே நான் வேறுவிதமாக எங்கேயாவது, எப்போதாவது சொன்னதும் கிடையாது. எனக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுகிற பொழுது; 'இல்லை உனக்கு ஆயுதத்திலே நம்பிக்கை இருக்க வேண்டும்! நம்பிக்கை இல்லை என்று சொன்னால் நீ தமிழினத் துரோகி' என்று சொல்லுவது எனக்கு ஒரு புரியாத விடயமாக இருக்கிறது. எனக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இல்லை என்றால், எனக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இல்லை! மற்ற பக்கமாக பார்த்தால்தான் அது பிரச்சினையாக இருக்க முடியும். 'எனக்கு வன் செயலிலேயே தான் நம்பிக்கை இருக்கிறது! நான் வன்முறையை மட்டும் தான் பயன்படுத்துவேன்!' என்று சொன்னால், அதைகுறித்து கேள்வி கேட்க வேண்டிய தேவை இருக்கிறது.

எங்களுடையகட்சிஒருஅகிம்சைகட்சி. எங்களுடைய கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா 'ஈழத்து காந்தி' என்று அழைக்கப்பட்டவர். இன்றைய கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா வெளியிட்ட அறிக்கையில், இந்திய சுதந்திரப் போராட்டத்தை பற்றி சொல்லியிருக்கிறார். அதிலே உத்தமசிங், பகத்சிங் ஆகியோருக்காக நேரு வாதாடிய போது, காந்தி அவர்கள் இங்கிலாந்துக்கு எழுதின கடிதத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார். அந்தக் கடிதத்திலேயே 'இவர்களுடைய வழிமுறைகளோடு எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், அவர்களுடைய அர்ப்பணிப்பை நான் மதிக்கிறேன்' என்று காந்தி எழுதியுள்ளார் எனச் சொல்லியிருக்கிறார். நானும் அதைத் தானே சொல்லுகிறேன். இன்றைக்கு, நேற்றா சொல்லுகிறேன்? பலவருடங்களாக இதையே தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த முறைகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. இன்றைக்கும் ஆயுதத் தில் எனக்கு நம்பிக்கை இல்லை. இன்றைக்கும் 'எங் களுக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இருக்கிறது' என்று அறிக்கை விடுகிற, கண்டன அறிக்கை விடுகிற எவராவது வாய்திறந்து சொல்வார்களா? 'எங்களுக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இருக்கிறது' என்று எவராவது சொல்வார்களா? எனக்கு நம்பிக்கை இல்லை. நான் அதனை சொல்லுகிறேன். நான் அதனை சொல்லுவது எவ்வாறு குற்றமாக முடியும்?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவராகிய செல்வம் அடைக்கலநாதன் 'இது மன்னிக்க முடியாத குற்றம்' என்று சொல்லியிருக்கிறார். 'வன்செயலிலோ ஆயுதத்திலோ நம்பிக்கையில்லை' என்று நான் சொல்வது, 'மன்னிக்க முடியாத குற்றம்' என்று அவர் சொல்லியிருக்கிறார். நான் அவரிடத்தில் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். அப்படியானால் தமிழரசுக் கட்சியின் தலைவர்களாக இருந்த தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் அவர்களை கொலை செய்ததை மன்னித்தது ஒரு குற்றமா? அது எப்படி 'இது ஒரு மன்னிக்க முடியாத குற்றம்' என்று அவர் சொல்லுவார்?

எல்லாரும் விழுந்தடித்து, ஒருவருக்கொருவர் முன்னாக வந்து கண்டன அறிக்கைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். கண்டன அறிக்கைகளை வெளியிட்ட ஒருவர் கூட, எங்களுடைய கட்சியை சேர்ந்தவர்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த ஒருவர் கூட, இது குறித்து என்னோடு பேசவில்லை. கண்டன அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக. மாவை சேனாதிராஜா கூட, அறிக்கையை வெளியிட்டு இரண்டாவது நாள் தான் என்னோடு பேசினார். ஏன் அவர்களால் என்னோடு பேச முடியவில்லை? கப்பிட்டல் டிவி ஆட்சியாளர்களுடைய ஓர் ஊடகம். தான் மொழிபெயர்த்து, நான் இருபத்தொரு நிமிம் கொடுத்த செவ்வியிலே, இரண்டு, மூன்று பதில்களை எடுத்து செய்தியாக அறி வித்ததை கண்ட உடனேயே, கொதித்தெழுந்து கண்டன அறிக்கை விடுகிறவர்கள், பத்து வருமாக இந்த கட்சியிலேயே நான் வேலை செய்கிறேன். பல வியங்க ளுக்காக என்னுடைய தொலைபேசியில் எடுப்பார்கள். சிலவேளை பதில் சொல்லாவிட்டால் பத்து தடவையாவது திரும்ப எடுப்பார்கள். ஒரு தடவையாவது எடுத்து 'நீங்கள் சொன்னீர்களா? இதை திரிவுபடுத்தி இருக்கிறார்களா?' என்று கேட்கவில்லை. என்னுடைய செய்திகள் பல வற்றை திரிவுபடுத்துவது சகஜமாக நடக்கிற விடயம். அது எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிந்தது. அப்படி இருந்தும், ஒருவர் கூட, இது மிகவும் கவலைக்குரிய விடயம். நான் சொன் னது எந்தவித தவறும் இல்லை என்று எவருக்கு முன்பாகவும், கட்சிக்கு முன்பாகவும் நான் நிரூபிக்க தயாராகத்தான் இருக்கிறேன். அதிலே மாற்று கருத்து கிடையாது. ஆனால் அவர்களுடைய செயற்பாடு, என்னிடத்தில் கேட்காமல், சரியான மொழிபெயர்ப்பை அறிந்து கொள்ளாமல், பகிரங்கமாக கண்டன அறிக்கை வெளியிட்டது மிக மிக தவறானது. கட்சித் தலைவரும் உட்பட. இதை நான் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய கடமை இருக்கிறது.

'சிங்கள மக்கள் மத்தியில் நான் வாழ்வது நல்ல விடயம்' என்று நான் சொன்னதை பலர் கேலி பண்ணி இருக்கிறார்கள். அந்த கேள்வியை உற்றுப்பார்க்க வேண்டும். 'நீ சிங்கள மக்களை வெறுப்பவன்அல்லவா?' அதுதான் கேள்வி. ('வைரய தியனவனே') 'வைரய' என்றால் 'வெறுப்பு'. 'நீ சிங்கள மக்களை வெறுக்கிறவன்!' என்று குற்றச்சாட்டோடு கேள்வி வைக்கப்படுகிறபோது, நான் என்ன பதில் சொல்லுவது? 'இல்லை! அது எப்படி நீ எனக்கு அப்படி சொல்லலாம்? நான் கொழும்பிலே வாழ்ந்தவன். பல சிங்கள நண்பர்கள் இருக்கிறார்கள். சிங்கள மக்களோடு சேர்ந்து வாழ்வது ஒரு பாக்கியமாக கருதுகிறேன்' என்று சொல்லியிருக்கிறேன். அது உண்மை. அதிலே குழம்புவதற்கு என்ன இருக்கின்றது என்று எனக்கு தெரியாது.

இன்றைக்கு எங்களுடைய அரசியல் இலக்கை நாங்கள் அடைவதற்கு நாங்கள் ஆட்சியாளர்களோடு பேசுகிறோம். பெரும்பாலான சிங்கள மக்கள், நியாயமானதொன்றை நாங்கள் கேட்கின்றோம் என்பதை நம்பவேண்டும். நாங்கள் நாட்டை பிரிக்க முயலுகிறோம் என்று அவர்கள் நினைத்தால், எங்களுக்கு தீர்வே கிடைக்காது.

நாங்களும் நாட்டை பிரிக்க முயலவில்லை. மக்களிடத்திலே நாங்கள் வாக்கு கேட்டு, மக்கள் எங்களுக்கு கொடுக்கிற ஆணை, ஒரு நாட்டுக் குள்ளே ஒரு சமஷ்டி தீர்வென்பதாகும். சமஷ்டியை பற்றி நான் அவருக்கு விளக்கமாக சொன்னவுடனேயே அவர் வாயடைத்துவிட்டார். ஆனால் அவர் சொன்ன குற்றச்சாட்டு 'சமஷ்டி என்றால் பிரிவினைதானே!'. அது அவருடைய கருத்து மட்டுமல்ல, இந்த நாட்டிலே வாழுகிற 90 வீத சிங்கள மக்களுடைய கருத்து அது. அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். சொல்லுகிற போது 'இவன் பிரிவினைவாதி அல்லன். இவன் நியாயமாக பேசுகிறான்' என்ற எண்ணம் சிங்கள மக்களுக்கு இருக்க வேண்டும். நாங்கள் எதை அடைய நினைக்கின்றோம் என்பது முக்கியமானது. பேச்சுவார்த்தை மேசைக்குப் போய் அமருகிறபோது, விடுதலை புலிகளுடைய புலிக்கொடியோடு போய் அமர்ந்து பேசலாமா? – எங்களுடைய உரிமைகளை பெறுவதற்காக இன் றைக்கு.

'திரும்பவும் ஆயுதம் எடுத்து போராட வேண்டும்' என்று உண்மையாக சொல்லி ஒருவன் முன்வந்தால் நான் அவனை மதிப்பேன். ஆனால், பொய்யாக, மக்களுடைய உணர்வுகளை கிளறிவிடுவதற்காக மட்டும், பொறுப்பில்லாமல், 'நாங்கள் ஆயுத போராட்டத்திற்கு ஆதரவானவர்கள்' என்று இன்றைக்குச் சொல்லிக் கொண்டு இருக்கிறவர்கள், என்னுடைய மதிப்பை பெறவே மாட்டார்கள். மக்களும் அவர்களை மதிக்கவே கூடாது.

நன்றி!

# தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம்

## தமிழ் சிவில் சமூக அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே. 14

தமிழினப் படுகொலையின் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம் என்று தமிழ் சிவில் சமூக இணையம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழினப் படுகொலையின் 11ஆவது நினைவு நாளை தமிழ் தேசம் எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி அனுட்டிக்கவுள்ளது. ஆழமாகிவரும் இராணுவமயமாக்கல், அச்சுறுத்தும் கொரோனோவுக்கு மத்தியில் நாம் இம்முறை இந்த நினைவு நாளை அணுக வேண்டியுள்ளது.

பொறுப்புக்கூறல் போராட்டம் இந்தத் தலைமுறையோடு முடிவடையாது என்பதும் தலைமுறை கடந்ததாக அமையும் என்பதும் எமக்கு கடந்த வருடம் உணர்த்திய பாடங்கள். நீண்ட, தலைமுறை கடந்த நீதிக்கான போராட்டத்துக்கான நிறுவனம் சார் ஏற்பாடுகளையும் கட்டமைப்பு சார் செயற்பாடுகளையும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த போராட்டத்திற்கு தேவையான கூட்டு உள வலிமையையும் ஓர்மத்தையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால் அவலத்திற்குப் பின் பிறந்த ஓர் தலைமுறை எமது தாயகத்தில் வளர்ந்து வருகின்றது. அந்த தலைமுறைக்கு எமது தேசத்தின் வரலாற்றையும் போராட்டத்தின் வரலாற்றையும் நாம் அனுபவித்த அனுபவிக்கும் ஒடுக்குமுறையையும் பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அந்த ஒடுக்குமுறையோடு வாழப் பழகாதிருக்க, அவ்வொடுக்குமுறையிலிருந்து அவர்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிவகைகளை நாம் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அவ்வாறான தற்காப்பு பொறிமுறைகளில் ஒன்று நினைவேந்தல்களை முறையாக ஒழுங்கமைத்துக் கொள்வது.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினால் ஏலவே கோரப்பட்டுள்ளவாறு இந்த முறை நாம் நினைவேந்தலை எமது இல்லங்களில் இருந்து ஆரம்பிப்போம்.

பின்வரும் மூன்று செயற்பாடுகளில் தாயகத்திலும் புலத்திலும் உள்ள அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும் என அன்புரிமையுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவோடு இணைந்து கேட்டுக் கொள்கின்றோம். மே 18 2020 அன்று இரவு 7 மணிக்கு வீடுகளில் தீபங்கள் ஏற்றி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரல்.

மே 18 2020 அன்று எமது மக்கள் போரின் இறுதி நாள்களில் உட்கொண்ட கஞ்சியை அன்றைய தினம் ஒரு வேளையேனும் உணவாகாராமாக்கிக் கொள்ளல்.

மே 18 2020 அன்று இரவு 7 மணிக்கு அனைத்து வணக்கத்தலங்களிலும் சிறப்பு மணி ஒலி எழுப்பி பேரவலத்தை நினைவேந்தல்.

இத்தகைய செயற்பாடுகள் நினைவேந்தலை சமூகமயப்படுத்த உதவும் என நாம் நம்புகிறோம். எமக்குள் என்றும் நீங்கா அந்த நினைவு விளக்கை தூண்டி விட அனைவரும் கரம் கோர்ப்போம் - என்றுள்ளது.

# மாலைதீவிலிருந்து 284 பேர் இன்று இலங்கை மீண்டனர்







இன்று காலை மாலைதீவில் இருந்து 284 பயணிகளுடன் ஸ்ரீலங்கா விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல். 102 என்ற விமானம் கட்டுநாயக்கா வந்தடைந்தது.

இவர்களுள் இரு கர்ப்பணிப் பெண்களும், மூன்று கைக் குழந்தைகளும், மூன்று சக்கர நாற்காலி மற்றும் ஒரு ஸ்ரெட்ச்சர் பயணிகளும் அடங்குவர்.

கொவிட் 19 பயணக் கட்டுப்பாட்டுக்குப் பின்னராக மாலைதீவில் இருந்து இலங்கையருடன் வந்தடைந்த முதலாவது விமானம் இதுவாகும்.

கட்டங்கட்டமாக அங்குள்ள ஏனைய இலங்கையர்களையும் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மாலைதீவில் உள்ள இலங்கைத் தூதரகம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

# சி.ஐ.டியினர் அச்சுறுத்தி கையொப்பம் பெற முயன்றனர் என மூன்று மாணவர்கள் மனு!

கொழும்பு, மே. 14

தங்களை அச்சுறுத்தி, சி.ஐ.டியினர் போலி ஆவணங்களில் கையொப்பங்களை பெறமுயன்றனர் என்று, மூன்று முஸ்லிம் மாணவர்கள் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இஸ்லாமிய மதபாடசாலையில் ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதனைத் தங்களுடன் தொடர்புபடுத்த குற்றவியல் விசாரணைப் பிரிவினர் முயன்றார்கள் என்றும், மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்று மாணவர்களின் சார்பிலும் அவர்களின பெற்றோர்கள் இந்த மனுவில் கைச்சாத்திட்டுள்ளனர். சட்டத்தரணி பிரபுதிகா திசேர பெற்றோர்களின் சார்பில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

குற்றவியல் விசாரணைப் பிரிவினர் என தங்களைக் குறிப்பிட்டவர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டனர் என மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கணவரை கொலை: மனைவி கைதானார்

கொழும்பு, மே. 14

கணவரை மனைவியே வெட்டிக்கொன்ற சம்வம் ஒன்று இன்று அதிகாலை பொலன்னறுவை, அரலகங்வில பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பொலனறுவை மாவட்டத்திற்குட்பட்ட அரலகங்வில, மெத்மஹிந்தாகம யாய - 07 பிரதேசத்தில் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தவர் 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். இதையடுத்து மேற்கொண்ட மேலதிக விசாரணையில் அந்தக்கொலையை செய்தது அவரது மனைவி எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், இக்கொலைச் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை எனவும் தெரிவித்த பொலிஸார், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேர்தலை நடத்தும் அறிக்கையைப் பெறுவதற்கே சுகாதார அமைச்சின் செயலராகப் படை அதிகாரி

## அரசைச் சாடுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மே. 14

பொதுத் தேர்தலை நடத்துவதற்கான சாதகமான பதிலைப் பெற்றுக்கொள்வதற்காகவே சுகாதார அமைச்சின் செயலாளராக அரசாங்கம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரை நியமித்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமித்திருப்பது மற்றும் உதவித் தொகை வழங்கலில் பிரதான கட்சியின் பிரதிநிதிகளை நியமித்திருப்பது தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி விமர்சித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சுக்களுக்கான செயலாளர்களை அண்மையில் மாற்றியிருந்தார்.

பல்வேறு அமைச்சுக்களுக்கும் செயலாளர்களை நியமித்த ஜனாதிபதி, சுகாதார அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க நியமிக்கப்பட்டார்.

இறுதிப் போரில் பாரிய பங்கை வகித்திருந்த இவர், தற்சமயம் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விவகாரம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன.

அந்த வகையில் கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திவிட்டதாகவும், பொதுத் தேர்தலுக்கு உகந்த தருணம் வந்துவிட்டதாகவும் என்கிற அறிக்கையை வெளியிடவே இராணுவ அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் எனச் சாடினார்.

'அரசு பல்வேறு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களை நியமித்த போதிலும் சுகாதார அமைச்சிற்கு ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவரை நியமித்திருப்பது விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறு இராணுவ அதிகாரி ஒருவரைச் சுகாதார அமைச்சுக்குச் செயலாளராக நியமித்திருப்பதன் நோக்கம் அரசுக்கு அவசியமான சுகாதார அறிக்கையை பெற்றுக்கொள்வதே ஆகும்.

தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருக்கும், கட்சி பிரதிநிதிகளுக்கும் இடையில் பலசுற்று சந்திப்பு நடந்தது. இந்தச் சந்திப்புக்களின் இறுதியில், சுகாதாரத் துறையினரது பரிந்துரைக்கு அமைய அடுத்தகட்ட முடிவு எடுக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இருப்பினும் தற்போதைய நிலைமையில் தேர்தலை நடத்தினால் ஆபத்தாகும் என்றும் சமூக இடைவெளியைப் பேண முடியாமல் போய்விடும் எனவும் சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்நிலையில் அடுத்த சந்திப்புக்களின்போது அரசாங்கத்திற்கு அவசியமான சுகாதார அறிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழுவில் அரசாங்கத்தினால் தாக்கல் செய்ய முடியும். இதனூடாக கொவிட் - 19 வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிக்கையை வழங்குவார்கள்.

இது ஒருபுறம் இருக்க, மறுபுறத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு செயலாளர்கள் நியமனங்களை வழங்கி சட்டத்தை மீறியுள்ளது. அதே போல 5000 ரூபா உதவித்தொகை வழங்கலிலும் பிரதான அரசியல் கட்சியின் பிரநிதிகளை நியமித்து அவற்றை அரசாங்கம் செய்தது.

இவை தேர்தல்கள் சட்டத்தை மீறும் வகையில் அமைந்துள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம், தற்போதைய நிலையில் நாடு திறந்துவிடப்பட்டால் பேராபத்து ஏற்படும் என்று எச்சரித்திருந்தது. மேலும் சீனாவின் வூஹான் மாநிலத்திலும் இரண்டாவது தடவை கொரோனா தொற்று பரவ ஆரம்பித்துள்ளது. இப்படியிருக்க பொதுத் தேர்தல் வைத்தால் பேராபத்து ஏற்படும் - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2020 இல் வெளியிடப்பெற்றது.